**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 424 of 2025 |

Depositions of PW 4 - witness for ________ { Prosecution / Defence / Court

Name : தங்கராஜு

Father's Name : த/பெ.

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th **day of May** 2026.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று இருகூரில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 07.12.2017 ஆம் வருடம் சூலூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது காலை 6.30 மணிக்கு சூலூர் காவல் நிலையத்தில் நிலைய அலுவலில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. குமரேசன் அவர்கள் தாமஸ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று வழக்கின் தன்மைப்படி சூலூர் காவல் நிலைய குற்ற எண் 1096/2017 சட்டப்பிரிவுகள் 279,304-A of IPC இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ. 3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை இணைத்து நீதித்துறை நடுவர் சூலூர் அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். ஒரு நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் ரவீந்திரன் அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார். மேற்படி வழக்கினை புலன்

விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் ரவீந்திரன் அவர்கள் அன்றைய தினமே காலை 7.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கிறிஸ்டோ மற்றும் jesto ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகசர் **அ.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.மாதிரி வரைபடம் **அ.சா.ஆ. 5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

சாட்சிகள் தாமஸ், அவனிசுந்தர், செல்டன், கிறிஸ்டோ மற்றும் ஜஸ்டோ ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவத்தில் இறந்த லாரன்ஸ் என்பவர் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தாரர்கள் முன்னிலையில் கோவை அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரி சவக்கிடங்கின் முன்பாக பிரேத விசாரணை மேற்கொண்டு உள்ளார். பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பிரேத விசாரணை சாட்சிகள் ரெய்சி, ரீமாலாரன்ஸ், ஜான்சன், அந்தோணி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவத்தில் இறந்த லாரன்ஸ் அவர்களின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதம் மூலமாக பிரேத விசாரணைக்கு உட்படுத்தியுள்ளார். இவ்வழக்கின் எதிரி தன்னிச்சையாக நிலையம் ஆஜரானவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நிலைய ஜாமீனில் விடுவித்துள்ளார். பின்னர் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நான் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட எதிரி ஓட்டி சென்று விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை வேண்டுகோள் கடிதத்துடன் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்கு உட்படுத்தினேன். மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் சத்தியமூர்த்தி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை கிடைக்கப்பெற்றேன். மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.7 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. மேலும் சம்பவத்தில் இறந்த லாரன்ஸ் அவர்களின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட கோவை அரசு மருத்துவமனை மருத்துவர் பாண்டீஸ்வரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெற்றேன். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ. 8 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் குமரேசன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் ரவீந்திரன் அவர்களை விசாரித்தேன். இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவு 279,304-A of IPC இன் கீழ் கடந்த 02.03.2018 தேதி குற்றை இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் காவல் நிலையத்தில் இவ்வழக்கு சம்பந்தமாக புகார் கொடுக்க யார் வந்தார்கள் என கேட்டு தெரிந்து கொண்டேனோ என்றால் தாமஸ் அவர்கள் புகார் அளிக்கப்பட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. புகாரை காவல் நிலையம் வந்த பொழுது எழுதிக் கொண்டு வந்துள்ளார்கள். PW1 நீதிமன்ற விசாரணையில் புகார் காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டதாக சொல்லியிருந்தால் தவறு என்றால் சரிதான். தாமஸ் அவர்களுக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்பது அது சம்பந்தமாக நான் விசாரிக்கவில்லை. புகாரில் எதிரி இருசக்கர வாகனத்தில் சென்று சைக்கிள் மீது மோதிவிட்டு நிலை தடுமாறி அருகில் இருந்த டிரான்ஸ்பார்மர் மீது மோதி விட்டதாக சொல்லி உள்ள நிலையில் டிரான்ஸ்பார்மர் சம்பவ இடத்தில் இருந்ததற்கு உதவி ஆய்வாளர் தயார் செய்த மாதிரி வரைபடத்தில் அதற்கான எந்த குறிப்புகளும் இல்லை என்றால் சரிதான்.

பொதுவாக இருசக்கர வாகனம் சைக்கிள் மீது மோதி விபத்து ஏற்பட்டால் சைக்கிலுக்கு தான் அதிக அளவில் சேதாரங்கள் ஏற்படும் என்றால் சரிதான். இவர் அதன் பின்னிட்டு ட்ரான்ஸ்பார்மரில் போய் மோதி கொண்டதால் அதிக அளவில் இருசக்கர வாகனத்திற்கு சேதாரங்கள் ஏற்பட்டது. சம்பவத்திலிறந்த லாரன்ஸ் தான் திடீரென சாலையில் சைக்கிளில் வந்ததால் விபத்து ஏற்பட்டது என்றும் சரிவரப் புலன் விசாரணை மேற்கொள்ளாமல் எதிரியின் அஜாக்கிரதையால் சம்பவ விபத்து ஏற்பட்டதாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் செல்லவில்லை வழக்கிற்காக சம்பவ இடம் சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றும் சம்பவ இடம் சென்று இருந்தால் அங்கு இருந்த நிலை குறித்து என்னால் குறிப்பிட்டு கூற இயலும் என்றும் தான் சம்பவ இடம் செல்லாதால்தான் என்னால் அருதியாக கூற இயலவில்லை என்றால் சரியல்ல.

சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் எதிரி மீது தவறுதலான குற்ற இறுதியை அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

**Signature of Witness** **(Sd/-T.Arunkumar)**

**Judicial Magistrate**

**Sulur.**